மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது குடிநீர் ஆதாரமே இல்லாத பகுதிகளுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஓரளவு குடிநீர் வசதி பெற்ற கிராமங்களை அடுத்தக் கட்டமாக எடுத்துக் கொண்டு, அவற்றைச் செயற்படுத்த அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு, விரைவிலே அங்கே குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

9-45 மணி

சித்த வைத்தியக் கல்லூரி

* 5496 திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் சித்த வைத்தியக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொல்லிமலை மூலிகைகள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே அங்கே சித்த வைத்தியக் கல்லூரி அமைத்தால் படிப்பவர்கள் நேரடியாக மூலிகைகளைத் தெரிந்து கொண்டு, படிக்க வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கே ஒரு சித்த வைத்தியக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தமிழகத்திலே 2 இடங்களிலே சித்த வைத்தியக் கல்லூரிகள் நிறுவப்பட்டிருக்கின்றன. பாளையங்கோட்டையிலே ஒன்றும், பழனியிலே ஒன்றும் நடைபெற்று வருகின்றன. இருக்கிற சித்த மருத்துவக் கல்லூரிகளை விரிவுபடுத்தி, அந்த மருத்துவ மனைகளைச் சிறப்பாகச் செயல்படுத்தத்தான் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதை அதிகப்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு பரிசீலிக்கும். இப்போது இந்த இரண்டு மருத்துவமனைகளையும் விரிவுப்படுத்தி, அவற்றைத் திறமையாகச் செயற்படுத்தவும் அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

1990 மே 8]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று தற்போது பழனியிலே நடந்து வருகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயில்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. எங்களுடைய கட்சி அலுவலகத்திற்கு முன்னால் ஒரு வீட்டிலே அவர்கள் ஹாஸ்டலிலே தங்கி இருக்கிறார்கள், மிகவும் சிரமப்படுகிறார் கள். அந்தக் கல்லூரியை வேறு ஊருக்கு மாற்ற வேண்டு மென்று ஒரு கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம்கூட போன மாதத்தில் இருந்தார்கள். அங்கே பயிலும் ஆண்களுக்கும், பெண் களுக்கும் விடுதி வசதிகளை தனித் தனியாகச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? அதற்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கை என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாணவர்கள் அந்தக் கல்லூரியை சென்னைக்கே கொண்டு வர வேண்டுமென்று சென்ற ஆண்டு சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துகொள்வாரா என்பது என்னுடைய வினா. அவர் ஒத்துக்கொள்ள மாட்டார் என்று எண்ணுகிறேன். அதற்காக அரசு நடவடிக்கை எடுத்து அந்த மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அறநிலையத் துறையோடு பேசி அங்கே உள்ள சத்திரத்தை விடுதியாகக் கொடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறோம். மேலும் அங்கே நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இந்தக் கல்லூரி 1985 லே துவக்கப்பட்டு அங்கே நில ஆர்ஜிதத்திற்கு எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாத சூழ்நிலையில், இந்த ஆண்டு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக அறநிலையத் துறையோடு பேசி ஏற்பாடுகளைச் செய்து கொண் டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும்
முதலீட்டில் பங்கும் அளித்தல்.

* 2026 திரு. ஆர். அண்ணாநம்பி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட் டில் பங்கும் அளிக்கும் திட்டத்தை அரசு எப்போது நிறை வேற்றும்?